குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சாத்தூர்.

முன்னிலை: திரு. சா. வரதராஜன், பி.ஏ.,பி.எல்.,

நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்.

2025 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ம் நாள் புதன்கிழமை

STC.No.805 of 2024

(குவிமுச பிரிவு 313(1)(ஆ)–ன் படியான விசாரணை)

எதிரி : தமிழ்மணி

| | | | |
|---|---|---|---|
| 1) | கேள்வி | : | வாதி சத்திமுருகன் அவருடைய சாட்சியத்தில், எதிரியாகிய உங்களை தெரிந்த நபர் என்றும், 06.07.2024 ம் தேதி எதிரியான நீங்கள் வாதியிடம் உங்களுடைய குடும்ப சில்லரை கடன்களை தீர்ப்பதற்காகவும் ரூ.5,00,000/–ஐ ரொக்கமாக பெற்று கொண்டு மேற்படி கடன் தொகைக்கு ஈடாக எதிரியாகிய நீங்கள் அன்றைய தினமே, ஒரு புரோநோட்டு எழுதி கொடுத்ததாகவும், மேற்படி பணத்தை 3 மாதத்திற்குள் திருப்பி தருவதாக கூறியதாகவும் சாட்சியம் அளித்துள்ளாரே? நீர் என்ன சொல்கிறீர்? |
| | பதில் | : | நான் சக்தி முருகனிடம் முருகேஸ்வரி மற்றும் செல்வ கணேஷ் ஆகிய இருவரையும் அழைத்துச் சென்றேன், அவர்களுக்கு சக்தி முருகன் கடன் கொடுத்தார். அந்த இருவரையும் அவருக்கு தெரியாது என்பதால் பிணையமாக என்னுடைய காசோலை வேண்டும் என்று கேட்டார். ஆகையால் நான் என்னுடைய காசோலையை கொடுத்தேன். மேற்படி முருகேஸ்வரி மற்றும் செல்வ கணேஷ் ஆகிய இருவரும் சக்தி முருகனுக்கு கொடுக்க வேண்டிய வட்டியை வங்கி கணக்கு மூலம் கொடுத்துள்ளார்கள். முருகேஸ்வரி மற்றும் செல்வ கணேஷ் ஆகிய இருவரும் சக்தி முருகனுக்கு பணத்தை திருப்பிக் கொடுக்காததால் நானும் சக்தி முருகனும் முருகேஸ்வரி மற்றும் செல்வகணேஷ் வீட்டிற்கு சென்று பணத்தை திருப்பி கொடுக்குமாறு கேட்டோம். அவர்கள் பணத்தை திருப்பி கொடுக்காததால் அவர்கள் இருவர் மீதும் நான் திருமங்கலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன். சக்தி முருகன் என்னிடம் என்னுடைய காசோலை அவரிடம் இருப்பதால் அவர் அதை வைத்து வழக்கு போடுவதாக கூறினார். |
| 2) | கேள்வி | : | வா.சா.1 – வாதி சக்திமுருகன் மேலும் அவருடைய சாட்சியத்தில், அவர் பணத்தை 07.10.2024 ம் தேதி திருப்பி கேட்டதற்கு, நீங்கள் 07.10.2024 ம் தேதியிட்ட ரூ.5,00,000/–திற்கு தங்களுடைய State Bank of India, திருமங்கலம் வங்கி கிளையின் காசோலையை (காசோலை எண்.787581) கொடுத்ததாகவும், அப்போது மேற்படி புரோ நோட்டை திரும்ப பெற்றுக்கொண்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளாரே? நீர் என்ன சொல்கிறீர்? (வழக்கு காசோலையை காண்பித்து கேட்கப்பட்டது) |
| | பதில் | : | இந்த வழக்கில் உள்ள, என்னிடம் காட்டப்படும் காசோலை என்னுடைய வங்கிக் கணக்கிலிருந்து கொடுக்கப்பட்டதுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்துதான். ஆனால் அதில் எழுதப்பட்டுள்ள விபரங்கள் என்னால் எழுதப்பட்டதல்ல. நான் சக்தி முருகனிடம் கொடுக்கும்போது என்னுடைய கையெழுத்தை மட்டும் போட்டு வெற்று காசோலையாக கொடுத்தேன். |
| 3) | கேள்வி | : | வா.சா.1 – வாதி சக்திமுருகன் மேலும் அவருடைய சாட்சியத்தில், தங்களுடைய காசோலையை வாதி அவர் கணக்கு வைத்துள்ள சாத்தூர் கிளை DBS Bank India வங்கி கணக்கில் வசூலுக்காக 07.10.2024 ம் செலுத்திய போது, |

| | | | |
|---|---|---|---|
| | | | அது 08.10.2024ம் தேதி வங்கி கணக்கில் போதிய பணமில்லை (Funds Insufficient) என ரிட்டன் மெமோ கொடுக்கப்பட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளாரே? நீர் என்ன சொல்கிறீர்? |
| | பதில் | : | என்னுடைய வங்கி கணக்கில் அப்பொழுது பணம் இல்லை, நான் சாட்சிக்காக தான் என்னுடைய காசோலையை கொடுத்தேன். |
| 4) | கேள்வி | : | வா.சா.1 – வாதி சக்திமுருகன் மேலும் அவருடைய சாட்சியத்தில், 10.10.2024ம் தேதி எதிரியாகிய உங்களுக்கு மேற்படி காசோலை தொகையை கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், அதை நீங்கள் 15.10.2024 ம் தேதி பெற்று, பதில் எதுவும் அனுப்பவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளாரே? நீர் என்ன சொல்கிறீர்? |
| | பதில் | : | எனக்கு வந்த அறிவிப்பிற்கு நான் வழக்கறிஞர் மூலம் பதில் அனுப்பிவிட்டேன். |
| 5) | கேள்வி | : | வாதி மேலும் அவருடைய சாட்சியத்தில், மேற்படி காசோலை திருப்பப்பட்ட விவரம் தெரிந்தும் இதுநாள் வரை பணம் எதுவும் தரவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளாரே? நீர் என்ன சொல்கிறீர்? |
| | பதில் | : | நான் சக்தி முருகனிடம் பணம் எதுவும் வாங்கவில்லை என்பதால் பணத்தை திருப்பி கொடுக்க வேண்டியதில்லை. |
| 6) | கேள்வி | : | வாதி மேலும் அவருடைய சாட்சியத்தில், தங்களுடைய வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்று தெரிந்தும், மேற்படி காசோலையை கொடுத்து வாதியை ஏமாற்ற வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் செயல்பட்டதாகவும் கூறி, நீங்கள் மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138 கீழான குற்றச்செயலை செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளாரே? நீர் என்ன சொல்கிறீர்? |
| | பதில் | : | அவரை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணம் எனக்கு கிடையாது. |
| 7) | கேள்வி | : | இவ்வழக்கு குறித்து நீர் வேறு ஏதேனும் கூற வேண்டுமா? |
| | பதில் | : | இல்லை. பொய் வழக்கு. வேறு நபர்களுக்கு உதவி செய்ததற்காக என் மீது இந்த வழக்கு பொய்யாக பதிவு செய்யப்பட்டுள்ளதால் எனக்கு மன உளைச்சல் இருக்கிறது. |
| 8) | கேள்வி | | வழக்கை சமரசமாக முடித்துக் கொள்ள விரும்புகின்றீர்களா? |
| | பதில் | | நான் பணம் வாங்கவில்லை என்பதால் சமரசமாக முடித்துக் கொள்ள விரும்பவில்லை. |
| 9) | கேள்வி | : | உமது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா? |
| | பதில் | : | உண்டு |

மேற்படி கேள்விகள் என்னால் நேரடியாக எதிரியிடம் கேட்கப்பட்டு, அவர் கூறிய பதில்கள் என்னால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்.